(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(1).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2018 நவெம்பர் 21 புதன்கிழமை வெளியிடப்பட்டது

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 2/ ’18

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ அர்ஜுன ரணதுங்க

கௌரவ மனோ கணேசன்

கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன,— குடியரசின் நிதியிலிருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட பணியாட்தொகுதியினருக்கான எந்தவொரு செலவினையும் அங்கீகரிப்பதற்கு ஏதேனும் மற்றும் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் எவ்வித அதிகாரமுமின்மை,— 2018 நவெம்பர் 14 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையின்மைப் பிரேரணையின் 2 ஆம் பந்தி தொடர்பாக அரசியலமைப்பின் உறுப்புரை 48 இன் பிரகாரம் அமைச்சரவை கலைக்கப்பட்டிருப்பதாக 2018 நவெம்பர் 15 ஆம் திகதிய கௌரவ சபாநாயகரின் உத்தியோகபூர்வ அறிவிப்பினை இந்தச் சபையானது 2018 நவெம்பர் 16 ஆம் திகதி ஏற்றுக்கொண்டுள்ளதாலும், அதற்கிணங்க, அரசியலமைப்பின் உறுப்புரை 48 இல் உத்தேசிக்கப்பட்டவாறு 2018 ஒக்டோபர் 26 ஆம் திகதி முதல் கௌரவ மஹிந்த ராஜபக்ஷ உள்ளடங்கலான அரசாங்கத்தின் மீது இச்சபையானது நம்பிக்கையின்றிக் காணப்படுவதாகவும் இச்சபையானது மேலும் பிரேரணை நிறைவேற்றியுள்ளதாலும்;

அரசியலமைப்பின் உறுப்புரை 148 இல் ஆணையிடப்பட்டவாறு பகிரங்க நிதியின் மீது பூரண கட்டுப்பாட்டினைப் பாராளுமன்றம் கொண்டுள்ளதாலும்;

2018 நவெம்பர் 15 ஆம் திகதி முதல் குடியரசின் நிதியிலிருந்து அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அவர்களது தனிப்பட்ட பணியாட்தொகுதியினரின் சம்பளங்களையும் ஏனைய ஊதியங்களையும் செலுத்துவதற்குப் பெறப்படும் ஏதேனும் பணக் கொடுப்பனவுகளை அங்கீகரிப்பதற்கான எவ்வித அதிகாரமும் ஏதேனும் மற்றும் எல்லா அமைச்சுக்களினதும் செயலாளர்களுக்கும் இல்லையெனவும், மேற்படி அமைச்சர்களின் சார்பாக வெளிநாட்டுப் பிரயாணங்கள், உலங்கு வானூர்திகளைப் பயன்படுத்துதலை உள்ளிட்ட உள்நாட்டு வான் போக்குவரத்துகளுக்கு உறப்பட்ட செலவுகளை ஈடுசெய்வதிலிருந்தும் தவிர்க்கப்பட்டுள்ளனர் எனவும், இத்தீர்மானத்தினை மீறி ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளும் எந்தவொரு ஆளுக்கெதிராகவும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக.

---